2019 பிப்ரவரி 14]

1,930 கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தக் கடைக்கு சட்ட விதிகளுக்குட்பட்டு, உறுப்பினர் அவர்களே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிறப்பு நிதித் தொகுப்பிலிருந்தோ, மாவட்ட ஊராட்சி முகமை நிதித் தொகுப்பிலிருந்தோ கட்டிக்கொள்ளலாம். அவ்வாறு செய்யும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

புதிய மின்மாற்றி

***30192—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, இராஜேந்திரபுரம் ஊராட்சி, எருக்கலக்கோட்டையில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆலங்குடி தொகுதி, இராஜேந்திரபுரம் ஊராட்சி, எருக்கலக்கோட்டை பகுதியில் சீரான மின்சாரம் வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஏற்கெனவே இருந்த 100 கே.வி. டிரான்ஸ்பார்மரோடு கூடுதலாக ஒரு 100 கே.வி. டிரான்ஸ்பார்மர் 17-5-2018-ல் நிறுவப்பட்டு தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 பிப்ரவரி 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட இராஜேந்திரபுரம் ஊராட்சி, எருக்கலக்கோட்டையில் புதிய மின்மாற்றி அமைத்துக் கொடுத்திருப்பதாக தெரிவித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆலங்குடி தொகுதியில் குறைந்த மின்னழுத்தம் உள்ள பல்வேறு பகுதிகளில் புதிய மின்மாற்றிகளை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையினை நான் வைக்கிறேன். இது என்னால் நீண்ட நாட்களாகக் கேட்கப்பட்டு வருகின்ற கோரிக்கையாகும்.

பாத்தம்பட்டி ஊராட்சியில் பிள்ளையார் கோயில் தெரு, கே.வி. கோட்டை ஊராட்சியில் தவளைப்பள்ளம், கொடிவயல் ஊராட்சியில் மணிவிளான் வயல், செரியலூர் இனாம் ஊராட்சியில் வேளார் தெரு, மறமடக்கி ஊராட்சியில் மறமடக்கி கிழக்கு, ஆயிங்குடி ஊராட்சியில் கண்ணுத்தோப்பு மற்றும் ஆயிங்குடி மேற்கு, வல்லவாரி ஊராட்சியில் வல்லவாரி மேற்கு, இராஜேந்திரபுரம் ஊராட்சியில் இராஜேந்திரபுரம் கிழக்கு, மாத்தூர் ராமசாமிபுரம்-அம்பலக்கார குடியிருப்பு, புள்ளான் விடுதி ஊராட்சியில் சீரியதெரு, நெடுவாசல் மேற்கு ஊராட்சியில் பவளத்தாள்புரம், புதுக்கோட்டை விடுதியில் உள்ள கும்மங்குளம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியில் உள்ள அனைத்து ஊர்களின் பெயர்களையும் சொல்லிக்கொண்டிருக்க இது நேரமில்லை. எருக்கலக்கோட்டை பற்றி கேள்வி கேட்டுள்ளீர்கள். அதையொட்டி கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: இதுபோல் 11 இடங்களில் மின்மாற்றிகள் அமைக்க order கொடுத்திருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த மின்மாற்றிகள் புதியதாக அமைக்கப்படாத காரணத்தினால் நிறைய இடங்களிலுள்ள டிரான்ஸ்பார்மர்களில் பழுது ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரே மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர்) மூலமாக இரண்டு நாட்களுக்கு ஒரு முறை shift முறையில் மின்சாரம் வழங்குகிறார்கள். புதிய மின்மாற்றிகள் தேவையான அளவில் அந்த மாவட்டத்தில் உள்ளன. புதிய

2019 பிப்ரவரி 14]

டிரான்ஸ்பார்மர்கள் அமைத்துக்கொடுத்தால் அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, உடனடியாக இந்த மின்மாற்றிகளை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் தொகுதி முழுவதிலும் உள்ள ஊர்களுக்குக் கேட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு தேவை இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. அங்கு விவசாயம் அதிகம் நடைபெறுகின்ற காரணத்தினாலும், விவசாய மின் இணைப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும் மின்னழுத்தம் குறைவாக இருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் அதிகமான குறைபாடுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொன்னால், விரைவாக நடவடிக்கை எடுக்க தயாராகயிருக்கிறோம். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய, மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசின் நோக்கம் விவசாயிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்க வேண்டும் என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சில இடங்களைச் சொல்லியிருந்தார்கள். அங்கு அவற்றை மாற்றியிருக்கிறோம். அதுபோல், அந்தப் பகுதியில் 11 கே.வி. மின் ஒயர்களைக்கூட மாற்றி, சீரான மின்சாரம் வழங்குவதற்கான பணியை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் இவ்வளவு ஊராட்சிகளைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொன்னால், அந்த அதிகாரிகளிடத்தில் தொடர்புகொண்டு, எந்தெந்தப் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் இருக்கின்றது என்பதை அறிந்து, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதி விவசாயம் சார்ந்த தொகுதியாகும். இந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இதே அவையில் நான் கடந்த முறை வைத்தேன். குறிப்பாக, கொத்தக்கோட்டை ஊராட்சி, வம்பன் என்ற இடத்திலும், எல்.என். புரம் ஊராட்சி, அணவயல் என்ற இடத்திலும், வல்லத்திராக்கோட்டை ஊராட்சி, கொத்தமங்களம் பகுதி ஆகிய இடங்களிலும் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் தந்தால் அங்கு துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று தனது பதிலில் தெரிவித்திருந்தார்கள். கொத்தக்கோட்டை ஊராட்சி, வம்பன் என்ற இடத்திலும், எல்.என். புரம் ஊராட்சி, அணவயல் என்ற இடத்திலும் நாங்கள் மின்சார வாரியத்திற்கு இடத்தினை ஒப்படைத்திருக்கிறோம். ஆகவே, உடனடியாக அங்கு துணை மின் நிலையங்களை அமைத்துத் தர வேண்டுமென்கின்ற கோரிக்கையை வைக்கிறேன். அதோடு, சமீபத்தில் ஏற்பட்ட கஜா புயலின் தாக்கத்தால் அங்கே மின் கம்பங்கள் எல்லாம் விழுந்து, முற்றிலுமாகச் சேதமடைந்து, மீட்புப் பணிகளெல்லாம் நடைபெற்றன. அதற்குப் பின்னர், அங்குள்ள பகுதிகளில் தெரு விளக்குகளெல்லாம் எரியவில்லை, தொகுதி முழுவதும் இருளாக இருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, அந்தப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கெனவே 40 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. இந்த financial year-ல் 36 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான 3 கருத்துருக்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்சார வாரியத்திற்கு இடத்தை ஒப்படைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். எங்கெங்கெல்லாம் குறைந்த மின்னழுத்தம் இருக்கின்றதோ, அந்தப் பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் மூலமாக இடங்களைத் தேர்வு செய்து புதிய துணை மின்

2019 பிப்ரவரி 14]

நிலையங்கள் அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 174 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகளில் மின்சார வாரியத்திற்கு இடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால், அங்கு உடனடியாக துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு தயாராகயிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். அம்மாவின் வழியில் அம்மாவின் அரசை வழிநடத்தி, 60 இலட்சம் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் அறிவித்து, தொழிலாளர்களின் இதயங்களில் இடம் பெற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து, பேச வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் பர்கூர் ஊராட்சி 30-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களைக் கொண்ட மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியாகும். இப்பகுதிக்கு அடிவாரத்தில் உள்ள எண்ணமங்கலத்திற்கும், பேரூருக்கும் இணைந்து கம்பம் வழியாக மின்சாரம் செல்கிறது. இதனால், காற்று அதிகமாக வீசும் காலங்களிலும், மழைக் காலங்களிலும் மின் கம்பங்கள் மரங்களில் உரசி அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மலைப் பகுதிக்கு வருகை தந்தபோது, அங்கிருந்த மக்கள், பர்கூர் மலைப் பகுதிக்கு எண்ணமங்கலம் feeder-*லிருந்து பிரித்து, தனி* feeder *அமைத்து புதைவடத் தடங்கள்மூலம் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஏற்பாடு செய்வதாக தெரிவித்தார்கள். எனவே, எண்ணமங்கலம்* feeder-*லிருந்து பர்கூர் மலைக்கென்று தனி* feeder

ஆக பிரித்து உருவாக்கி--புதைவடத் தடங்கள்மூலம் மின்சாரம் வழங்க ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் மலைப்பாங்கான பகுதிகளில் மின் கம்பங்களுக்குப் பதிலாக புதைவடத் தடங்களாக அமைக்க வேண்டுமென்றுதான் கோரிக்கை வைக்கின்றார்கள். மலைப் பகுதிகளில் புதைவடத் தடம் அமைப்பதில் என்ன பிரச்சினை என்று சொன்னால், வனத் துறையிடமிருந்து அனுமதி பெறுவது கடினமாக இருக்கிறது. அப்பகுதிகளில் விலங்குகள் நடமாட்டம் இருக்கின்ற காரணத்தினால் அவை பாதிக்கப்படும் என்ற காரணத்தினால் அனுமதி கொடுப்பதற்கு வனத் துறை மறுத்துக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், புதைவடத் தடங்களாக மாற்றுவதற்கு 5 மடங்கு செலவாகின்றது; அதனால், நிதிநிலைமைக்கு ஏற்பதான் பரிசீலிக்கப்படும் என்றுதான் நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பர்கூருக்கு A.E. அலுவலகம் உடனடியாக அனுமதித்து, அது இப்பொழுது பயன்பாட்டிற்கும் வந்திருக்கின்றது. மரியாதைக்குரிய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மற்றும் நானும் அங்கு சென்றிருந்தபோது அவர்கள் இதுகுறித்து கோரிக்கை வைத்தார்கள். கோரிக்கை வைப்பது எளிது; அதை நடைமுறைப்படுத்துவது கடினம், அதுவும் மலைப்பாங்கான பகுதிகளில் நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் கடினம். எனவே, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகரில் பல்லாவரம் சட்டமன்றத்

2019 பிப்ரவரி 14]

தொகுதி, 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்ட மிகப் பெரிய சட்டமன்றத் தொகுதி. இத்தொகுதியில் பல்லாவரம் நகராட்சி, பம்மல் நகராட்சி மற்றும் அனகாபுத்தூர் நகராட்சி ஆகிய 3 நகராட்சிப் பகுதிகள் உள்ளன. பல்லாவரம் நகராட்சியைப் பொறுத்தமட்டில், அஸ்தினாபுரம் பகுதியிலும், கீழ்க்கட்டளை பகுதியிலும் 2 துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்றும், அதேபோல அனகாபுத்தூர் நகராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்றும் பலமுறை நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் நூற்றுக்கும் மேற்பட்ட துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் இந்த துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான இடத்தைப் பார்வையிட்டு, இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. மின் துறை அதிகாரிகளும் வந்து பார்வையிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால், வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அதை விரைந்து முடிக்காத காரணத்தால், காலதாமதமாகி கோப்புகள் நிலுவையில் உள்ளன. ஆகவே, இந்த ஆண்டாவது எனது சட்டமன்றத் தொகுதியில் அந்த 3 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அவையில் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார். அனகாபுத்தூர், அஸ்தினாபுரம் ஆகிய இடங்களில் நிலம் கண்டறியப்பட்டு, தற்போது அதற்கான கோப்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதை ஆய்வு செய்து,* enter upon permission *வழங்கும்படி கோரப்பட்டுள்ளது. அநேகமாக இந்த வாரத்திற்குள் அந்த அனுமதியைப் பெற்றுவிடுவோம். மாவட்ட ஆட்சித் தலைவர்* enter upon permission *கொடுத்துவிட்டால் அந்த இடத்தில் பணிகளைத் தொடங்கிவிடலாம். அதற்குப் பின்னர், தலைமைச் செயலகத்தில் அந்தக் கோப்பு பெறப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கோப்பினை சுற்றுக்கு அனுப்பி அனுமதி பெற்றுக்கொள்ளலாம் என்று*

ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்மாற்றிகள் நீண்ட இடைவெளியில் இருப்பதால், High Tension மின்சாரம் கொண்டு செல்லப்படும்போது கிராமங்களில் மின் தடை ஏற்படும் நிலை அதிகமாக இருக்கிறது. கஜா புயல் பாதித்தபோது போதிய அளவில் மின்மாற்றிகள் இல்லாததால்தான் நிறைய இடங்களில் மின் விநியோகம் இல்லாமல் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசு தயாராக இருந்தால், tower போடுவதற்கான இடம் கொடுப்பதற்கு விவசாயிகள் தயாராக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு இலவச மின் இணைப்பு கொடுத்தால், tower அமைப்பதற்கு பிரச்சினையில்லாமல் விவசாயிகள் இடம் தருவார்கள். எனவே, இதுகுறித்து அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, solar power. நமது மாநிலம்தான் மரபுசாரா எரிசக்தி உற்பத்தியில் முதலிடத்தில் இருந்தது. ஆனால், இன்றைக்கு solar power உற்பத்தியில் தெலுங்கானா மாநிலம் முதலிடத்திற்கு வந்துவிட்டது. நமது மாநிலத்தில் தற்போது அதிகமானவர்கள் solar power plant அமைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், net meter அரசாங்கத்தில் போதிய அளவில் இல்லை என்பதால் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எல்லோருமே net meter பொருத்துவதற்குத் தயாராகயிருக்கிறார்கள். அதிக அளவில் net meter வழங்கப்பட்டால், நமக்கு அதிக அளவில் solar power கிடைக்கும். அவ்வாறு அதிக அளவில் சூரிய சக்தி மின்சாரம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் மக்களுக்கும், அதேபோன்று அரசுக்கும் பல வழிகளில் சுமைகள் குறையும். ஆகவே, இந்த net meter-ஐ உடனடியாக அவர்களுக்கு வழங்கி, அவர்களுடைய வீடுகளிலே solar power plant அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்திற்குப் பின்னர் Solar Power திட்டத்தைத் தொடங்கிய தெலுங்கானா மாநிலம்

2019 பிப்ரவரி 14]

தற்போது நம்மைவிட முன்னிலைக்குச் சென்றுவிட்டது. மீண்டும் தமிழகம் முதலிடத்திற்கு வருமளவிற்கு solar power *உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு, மூன்று கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். முதலாவதாக, மின்மாற்றிகள் குறைவாக இருக்கின்றன; அதனால் மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால், ஒரு மின்மாற்றி பழுதுபட்டால்கூட பல பகுதிகளில் மின் தடை ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். கஜா புயலடித்ததற்குப் பிறகு, அந்த மாவட்டத்திற்குச் சென்றபோதுதான் ஒரு விஷயத்தை நாங்கள் தெரிந்துகொண்டோம். என்னவென்று சொன்னால், ஓர் ஊரில் 10 வீடுகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்றால், 200 மின் கம்பங்கள் அமைத்து மின்சாரம் வழங்க வேண்டியிருக்கிறது. அந்த அளவிற்கு* load *இல்லாமல் இருக்கின்றது. அதனால், வேறு வழி இல்லை; இன்னோர் பகுதியில்* load *அதிகமாக இருந்து, அந்தப் பகுதிக்கு மின்மாற்றி வேண்டுமென்று சொன்னால், அதை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதைத்தான் நாங்கள் சொன்னோம். நாகப்பட்டினம் மாவட்டத்தில், 10 வீடுகளுக்காக 200 மின் கம்பங்கள் அமைத்து மின்சாரம் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, மின்சாரத்திற்கான* load *குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இதுபோன்ற சூழ்நிலை ஏற்படுகின்றது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் tower *அமைப்பது பற்றிச் சொன்னார்கள். இதுகுறித்து அரசு ஏற்கெனவே ஒரு தெளிவான கொள்கையை அறிவித்திருக்கிறது.* Tower *அமைப்பதற்கு இடம் அளிக்கும்பட்சத்தில், அந்த இடத்தின் மதிப்பில், ஒரு மடங்குக்கு மூன்று மடங்குத் தொகையை தருவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது. அவர்கள் அந்தத் தொகையை வேண்டாம் என்று சொன்னால், அதற்குப் பதிலாக அவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அடுத்து, உறுப்பினர் solar power பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் முதன்முதலில் Solar Policy-யை வெளியிட்டு, மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். சூரியசக்தி மின்சாரத்தின் கொள்முதல் விலை என்ன என்பதை TNERC- தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் நிர்ணயம் செய்ய வேண்டும். ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 04 பைசா என்ற rate-ஐ அது நிர்ணயித்திருக்கிறது. அந்த rate மிகவும் குறைவாக இருப்பதால், அந்த rate கட்டுப்படியாகாது என்று சொல்லி solar power plant அமைப்பதற்குத் தயங்குகிறார்கள். அதுதான் காரணம். மேலும், net meter பொருத்துவதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரத்தில் புதிய Solar Policy-ஐ வெளியிட்டிருக்கிறார்கள். Net feed-in என்ற ஒரு system-ஐ நாம் இப்போது கொண்டுவந்திருக்கின்றோம். அந்த system-ஐ அமல்படுத்தும்போது தேவையான அனைத்து வீடுகளுக்கும் net meter கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

73—

சமுதாயக் கூடம்

***4916—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம், சுப்புலாபுரம் ஊராட்சி, சங்கரலிங்காபுரம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,